**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 21 ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**O.S. NO. 345/2022**

**பி.வா.சா.1**

**திரு. ரங்கசாமி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல்விசாரணை தொடர்ச்சி**

நான் தற்போது மனுவுடன் தாக்கல் செய்துள்ள 29-11-1996 தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல் பி.வா.சா.ஆ.1 ஆகவும், 07-11-2017 தேதியிட்ட அ.வ.எண். 147/2016 ன் தீர்ப்புரை சான்றளிக்கப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆகவும், 06-03-2007 தேதியிட்ட அடமான கடன் பத்திரத்தின் செல்லு ரசீது அசல் பி.வா.சா.ஆ.3 ஆகவும், 25-02-2020 தேதியிட்ட கந்தாய ரசீது அசல் பி.வா.சா.ஆ.4 ஆகவும், 23-12-2010 தேதியிட்ட மின் கட்டண அட்டை அசல் பி.வா.சா.ஆ.5 ஆகவும், 23-02-2021 தேதியிட்ட விவசாய பயிர் கடன் தள்ளுபடி சான்று அசல் பி.வா.சா.ஆ.6 ஆகவும், 09-03-2020 தேதியிட்ட 1428 பசலிக்கான அடங்கல் கணக்கு சான்றளிக்கப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.7 ஆகவும், 09-07-2026 தேதியிட்ட புல எண் 153/1A2, 1A5, 1A8 க்கான பட்டா ( பட்டா எண். 936) கணினி நகல் பி.வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன்.

வேண்டுகோளின்படி முதல்விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.